

உ

சந்தோஷம்



# ஓங்கார ஆசிரம உலக ஆத்ம சாதனைத் திருநாள் அழைப்பு

## தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா அவர்களின்
## 77வது ஜெயந்தி திருநாள்



**வையம் வாழ வாருங்கள்**

**18 மற்றும் 19.1.2013 (வெள்ளி, சனி)**

"உங்களை ஈஸ்வர தரிசனத்திற்கு அழைக்கின்றோம்!
அங்கே ஆனந்தம் அமைதி அன்பு உண்டு!"

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு குருதேவா மகேச்வரஹ:
குரு ஸாக்ஷரத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ:

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தைக் கேட்டல்
தெளிவு குருவின்திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவுருவைச் சிந்தித்தல் தானே
- திருமூலர்

உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்
- சேக்கிழார்

எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனையேற்று
- வள்ளல் பெருமான்

எய்தி வழிபடில் எய்தாதன இல்லை
- திருமூலர்

உலகம் உய்ய உலகத்து உயிர்களெல்லாம் ஆன்மிக அமைதியோடு ஆனந்தமாய் வாழ உலக ஆத்ம சாதனைத் திருநாள் என்ற ஒன்றை தவத்திரு ஓங்காரநந்தா சுவாமிகள் சுமார் 40 ஆண்டுகளுக்குமுன்பு பிரகடனப் படுத்தியுள்ளார்கள்.

அருளன்புடையீர்!

சந்தோஷம். நிகழும் நந்தன ஆண்டு தை மாதம் 5,6, தேதிகளில் (18 மற்றும் 19.1.2013) வெள்ளி, சனி ஆகிய இரு நாட்கள் உலகப் பேரமைதிக்காக நாகை மாவட்டம் சீர்காழிக் அருகிலுள்ள வைத்தீஸ்வரன் திருக்கோயிலில் நிகழ்ச்சி நிரலின்படி தெய்வீக நிகழ்வுகள் நிகழும். இத் தெய்வீக நிகழ்விற்கு **தருமையாதீனம் 26வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமச்சாரிய சுவாமிகள்** அவர்கள் அன்பையும், ஆசியையும் வழங்கி அனுமதியளித்துள்ளார்கள். மயிலாடுதுறை பரப்பிரம்ம சற்குரு ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகளின் ஆக்ஞைப்படி இத்தெய்வீக நிகழ்வு நிகழ்கிறது. மயிலாடுதுறை பரப்பிரம்ம சொரூப மகா சித்தர் ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகளின் பிரதம சீடரும், ஓங்கார ஆசிரமத்தின் மகாதிபதியுமான **தவத்திரு சுவாமி ஓங்கார நந்தா அவர்களின் 77ஆவது ஜெயந்தி** உலக ஆத்ம சாதனைத் திருநாள் அணுக்கத் தொண்டர்கள், சீடர்கள், தீட்சை பெற்றவர்கள், உபதேசம் பெற்றவர்கள், பக்தர்கள் ஆகியோரால் வைத்தீஸ்வரன் கோயிலில் நடத்தப்படுகிறது. சாதுக்கள், சந்நியாசிகள், வேதாந்திகள், சித்தாந்திகள், மகாத்மாக்கள் அனைவரையும் இத்தெய்வீக உலக ஆத்ம சாதனைத் திரு நாளில் கலந்து கொண்டு உலகம் உய்ய அன்பு செய்ய வருமாறு அழைக்கின்றோம்.

**துறவி ஓம் லட்சுமிபாய்**
மூத்த துறவி, நிதிபொறுப்பு

**ஓம் ஞானேஸ்வரி**
நிர்வாக பொறுப்பு

R. **ரேவதி**, சென்னை

**ஓம் கோடீஸ்வரானந்தா**
**ஓம் சர்வாத்மானந்தா**
**ஓம் D.G. ரகுராமன்**

அன்பு ஆசிரம சீடர்கள்
சந்தோஷம்

**நிகழ்ச்சி நிரல்**

## அருள்மிகு வைத்தீஸ்வரன் திருக்கோவில்
## 18.01.2013 வெள்ளிக் கிழமை

**காலை 5.45 சூரியோதய தரிசனம்**

**மூலாதார ஈஸ்வர நாதம் எழுப்பல் ஆத்ம விழிப்பு பெறல்**

மகாரேவதியை ஆகர்ஷித்து ஆவாஹனம் செய்து மகா பூஜை நடத்துதல். பக்தர்கள், சீடர்கள், ஞானமாணாக்கர்கள், தீட்சை பெற்றவர்கள் உபதேசம் பெற்றவர்கள், தொண்டர்கள் அனைவரும் தன் அனாகதத்திற்குள்ளே நின்று பூஜையைக் கவனித்து உணர்தல், அதன்பிறகு மணிபூரக அக்னி திருப்தி செய்தல்

**காலை 7 மணி** அருள்மிகு வைத்திநாதேஸ்வரர் கோயில் சேர்தல்

திருக்குளம் சென்று தீர்த்தம் புரோக்ஷித்துக் கொள்ளல், அருள்மிகு விநாயகர், அருள்மிகு வைத்தியநாதேஸ்வரர், அருள்மிகு தையல் நாயகி, அருள்மிகு முத்துகுமாரசாமி மற்றும் அனைத்து சந்நிதானங்களையும் வழிபட்டு சந்நிதியில் அமர்தல்.

**காலை 10 மணி** அருள்மிகு வைத்திநாதேஸ்வரருக்கு 1008 லிட்டர் பால் அபிஷேகம் தொடங்குதல், அபிஷேக தரிசனம், ஆராதனை ஆரத்தியை வணங்கல், நமஸ்காரம் செய்தல், அருள்மிகு தையல் நாயகி அபிஷேகம், ஆராதனை, ஜெபம் செய்தல்

**தன்வந்திரி பகவான்:** தன்வந்திரி பகவான் அருளிய நூல்களை தன்வந்திரி பகவான் முன்பு வாசித்தல், அபிஷேக ஆராதனை தரிசனம், தண்டனிட்டு வணங்கல், பிரதாசம் ஏற்றல்

**மதியம்: மணிபூரகத் திருக்கமலங்களுக்கு அருட் பிரசாதம்**

**மாலை 4 மணி: சிவாலய தரிசனங்கள்**

திருப்புன்கூர், தலைஞாயிறு, திருவாளபுத்தூர், இலட்சுமீஸ்வரர், கழுகாணி முட்டம், துர்க்கையம்மன் கோயில், மயூரநாதர் கோயில், புனுகீஸ்வரர் கோயில், மாப்படுகை ருத்ரபூமி தொழுதல், இரவு அர்த்த ஜாமத்தில் சற்குரு திருவடி தரிசனம்

## 19.1.2013 சனிக்கிழமை

உலக ஆத்ம சாதனைத் திருநாள் பயிற்சி

காலை: மகா சூரிய தரிசனம்

ஆதித்ய ஹ்ருதயம் பாராயணம்

இடகலை பிங்கலை பயிற்சி. முன்று மண்டல கூட்டுப் பிரார்த்தனை, அன்று முழுவதும் வாசியைக் கவனித்தல், சுவாசத்தை சமச்சீர் படுத்துதல், ஆறாதாரத்தில் அதாவது ஆஞ்ஞா சக்கரத்தில் தன்னை வைத்தக் கொள்ளும் பயிற்சி பெறல், 6.30 - 7.30 பாராயணத்தோடு நகர்வலம், காலை 7 மணி அருள்மிகு வைத்திநாதேஸ்வர ஆலயத்தில் சுவாமி தரிசனம்

செய்ய வருதல், வழிபாடு, திரிகரண சுத்தியோடு பகவானை நாசி நுனியில் சிந்தித்தவாறு வருதல், திருக்குளம் சென்று அருள் தீரத்தத்தை எடுத்து சிரசின் உச்சியில் அதாவது பிரம்ம ரந்திரத்தில் படுமாறு தெளித்தல்.

முச்சுழி உணர்வு பெறுதல், அ/மி. வைத்திநாதேஸ்வரர் ஆலயத்திலுள்ள அனைத்து சன்னிதானங்களையும் நின்று வணங்குதல், தன் லலாடத்தை தான் கண்டறிய முயற்சித்தல், ஆலயத்தினுள் உள்ள ஓங்கார வெளியில் அமர்தல், 21 முறை ஓங்காரம் (வைகரி முறையில்) நாதயோகம் பயிற்சி பெறல், 15 நிமிடம் சிவ பஜனை, ஜெபம் 2000, அருள் சுக்குப்பால் வழங்குதல்.

காலை 11 மணி தியானம்

மதியம் 12.30 மணி சுவாமியின் உச்சிகால பூஜைதரிசனம்

சிவபெருமானை சிந்தித்த வண்ணம் 3 முறை ஆலயத்தை நிதானமாக வலம் வரல்

பகல் 1.30 மணி தேகத்தில் உட்சிவம் அமர்ந்திருக்க வழக்கமான ப்ரீதி செய்தல்

மாலை 4.00 மணி மகா ஜெபம் தொடர்தல்

மாலை 6.00 மணி சூரிய அஸ்தமன, சந்திரோதய ஓங்கார தியானம்

மாலை 6.30 மணி சிவ ஞான சப்த பிரம்ம வெளிப்பாடு

அருள்மிகு வைத்திநாதேஸ்வரர் பெருமை. பஞ்சாட்சரத்தின் பெருமை, உலக ஆத்ம சாதனை வல்லபம், எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வழி வகைகள், தெய்வீகம், பேருணர்வு, இன்பம் மலர வழி, எல்லாம் சிவமயம் என்று உணர்தல் ஆகிய தலைப்புகளில் அருளுரை வழங்குவார்கள்.

## இம்மகா சப்த பிரம்ம வெளிப்பாடு
## நிகழ்ச்சி நிரல்

முன்னிலை : அருள்மிகு வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம் கட்டளைத் தம்பிரான்,
**ஸ்ரீமத் திருநாவுக்கரசு சுவாமிகள்** அவர்கள்

வரவேற்புரை : **சுவாமி கோடீஸ்வரானந்தா**
ஓங்கார ஆசிரமத்தின் வாரிசு

அருளுரைகள் : திருமிகு **M. முருகுமாணிக்கம்**,
மூத்த வழக்கறிஞர், மயிலாடுதுறை

திருமிகு **ஜெகவீரபாண்டியன்**, Ex. M.L.A., மயிலாடுதுறை

முனைவர் **K. தியாகேசன்**, முதல்வர்,
ஏ.வி.சி கல்லூரி, மயிலாடுதுறை

: திரு. **குமார ராகவன்**, துணைத் தலைவர்,
ஓங்கார ஆசிரமம், சற்குரு அதிஷ்டானம், சீனிவாசநல்லூர்.

திரு. P.R. உமா மகேஸ்வரன்,
ஓங்கார ஆசிரமம், சென்னை

திரு. V.M. ராஜசேகர்,
ஓங்கார ஆசிரமம், சென்னை

நன்றியுரை : டாக்டர் R. அருண்குமார், உதவிப் பேராசிரியர்,
எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம், சென்னை

இரவு 8.00 மணி நூல் வாசித்தல்

அருள்மிகு சிவ தியானம், சற்குரு தியானம், அர்த்த ஜாம பூஜை சுவாமி தரிசனம், இரவு எதாஸ்தானத்தல் சற்குரு தரிசனம், அருளுரை, அருட் பிரசாதம் ஏற்றல், ஆசீர்வாதம், பூரண சரணாகதி நமஸ்காரம், மகா மௌனத்தோடு அவரவர் இருப்பிடம் ஏகல்.

20.1.2013 ஞாயிறு தவத்திரு சுவாமிகள் எல்லோருக்கும் விருந்தளிப்பார்கள், விருந்தின் அருட் பிரசாதத்தை ஏற்று இல்லம் ஏகல், பரமகுரு சித்தர் சுவாமிகள் அவதாரம் செய்த சீனிவாசநல்லூரில் 19.01.2013 உலக ஆத்ம சாதனை திருநாள் அன்று சற்குரு தியான மண்டபத்தில் சிறப்பு பூஜையும் வெட்டவெளி தியானமும் நடைபெறும்.

மயிலாடுதுறையில் சிறப்பு வழிபாடு நடைபெறும்

பாண்டிச்சேரிஓங்கார ஆசிரமத்தல் ஸ்ரீலஸ்ரீ மாதாஜி சித்தர் அதிஷ்டானத்தில் ஓங்கார ஆசிரம சீடர்கள், தொண்டர்களால் சிறப்பு வழிபாட்டு பூஜை நடைபெறும். அங்கு விநாயகருக்கும் ஆஞ்சநேயருக்கும் சிறப்பு வழிபாடு நடைபெறும்.


## சுவாமிகளின் சாதனைகள்


5வது உலக மகா பூஜை நடத்தியுள்ளார்கள், 60 ஆன்மிக நூல்களை அருளியுள்ளார்கள், தாய்க்கும் தந்தைக்கும் திருக்கோயில் கட்டியுள்ளார்கள், 500க்கு மேற்பட்ட வெட்ட வெளி தியானத்தை உலகம் முழுவதும் நடத்தியுள்ளார்கள், 1000 கோடி சிவ பஞ்சாட்சர மகா ஜெப வேள்வியைத் தொடங்கி நடத்தி வருகிறார்கள், 20 இலட்சம் மக்களுக்கு மேல் அன்னதானம் செய்துள்ளார்கள், மிக அதிக அளவில் வஸ்திரதானம் செய்துள்ளார்கள், சீனிவாசநல்லூரில் நுழைவு வாயில், சற்குரு தியான மண்டபம், சற்குரு அதிஷ்டானம், ஓங்கார ஆசிரமம் ஆகியவைகளைக் கட்டியுள்ளார்கள்.

புதுப்பட்டினம் ருத்ர பூமியில் மாதாஜி சித்தருக்கு தகன கட்டடம் கட்டியுள்ளார்கள், புதுச்சேரியில் மாதாஜி சித்தர் அதிஷ்டானம் நிறுவியுள்ளார்கள், தன் குரு நாதருக்கு 3 திருக்கோயில்களைக் கட்டியுள்ளார்கள், 1000க் கணக்கான அருளுரைகள் வழங்கி யுள்ளார்கள், 15 ஆன்மிக முகாம்களை நடத்தியுள்ளார்கள், தனது குரு நாதர் 1960ல் தந்த ஆக்ஞைப்படி சத்திய நெறியில் ஓங்கார ஆசிரமத்தை நிஷ்காமிய நிலையில் நடத்தி வருகிறார்கள்

# தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா அவர்களின் ஆன்மீக நூல்கள் பற்றிய குறிப்புகள்






ஞான வாசல்
ஓடிப் போ
MATHAJI GITA
கடவுளின் குரல்
நீயே பிரம்மம்
ஸ்ரீ சற்குரு அகண்ட நாமாவளி
ஐயைந்து மகான்கள்
ஜெபம்
ஞான முத்துகள்
ஞான மணிகள்
இறையருளுக்கு இனிய பாராயணம்
அந்த வாழ்க்கையின் முடிவெங்கே
பகவத் கீதை ஒரு புதிய நோக்கு
தியான யோகம்
ஞானோபதேசம்
உற்றதும் உணர்ந்ததும்
ஞானகானம்
மகர வித்தை
ஞானபூமி
மகா சித்தர்
என்று நீ ...?
உற்றதும் உணர்ந்ததும்
பாகம் - 2
உலக மகா சித்தர் வருகை
ஞானயாத்திரை
திருக்கல்யாணம்



சீனிவாசநல்லூர்
துழைவு வாயில்



புதுப்பட்டினம்
ஞானசித்தர்
ஆலயம்



புதுப்பட்டினம்
ஓங்கார ஆசிரமம்



செஞ்சி - காரை
சித்தர்கோயில்




புதுவை ஓங்கார
ஆசிரமம்



சீனிவாசநல்லூர்
அதிஷ்டானம்




சீனிவாசநல்லூர்
ஓங்கார ஆசிரமம்



சீனிவாசநல்லூர்
சற்குரு தியான
மண்டபம்



பி.முட்லூர்
சற்குரு தியான
மண்டபம்



திருச்சிற்றம்பலம்
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!